# நமது தின கனி


காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 40 | 4 Pages | 10.09.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 40 | 4 பக்கங்கள் | 10.09.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்



## ஜி20 விருந்து பாரம்பரிய இந்திய உடைகளில் பங்கேற்ற உலக தலைவர்களின் மனைவிகள்



புதுடெல்லி, செப். 10

ஜி20 மாநாட்டை முன்னிட்டு குடியரசு தலைவர் திரவுபதி முர்மு டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தின் பாரத் மண்டபத்தில் சிறப்பு விருந்தளித்தார். சிறப்பு விருந்தில் கலந்து கொள்ள வருகை தந்த வெளிநாட்டு தலைவர்களை இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஆகியோர் வரவேற்றனர். இந்நிலையில், குடியரசு தலைவர் திரவுபதி முர்மு அளித்த விருந்தில் கலந்து கொள்ள வந்த இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் மனைவி அக்ஷிதா, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா மனைவி யுகோ கிஷிடா, ஐ.எம்.எப். தலைவர் கிறிஸ்டினா ஜியார்ஜியா, மொரீஷியஸ் பிரதமர் மனைவி, வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட பலர் இந்திய பாரம்பரிய உடைகளை அணிந்து வந்திருந்தனர்.

## சந்திரபாபு நாயுடு கைதுக்கு கண்டனம்: உண்ணாவிரத போராட்டம் அறிவித்த தெலுங்கு தேசம் கட்சி



ஆந்திரா, செப். 10

ஆந்திராவில், முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெலுங்கு தேசம் கட்சி குற்றம்சாட்டி இருக்கிறது. மேலும், சந்திரபாபு நாயுடு கைதுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், நாளை உண்ணாவிரத போராட்டம் நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்து இருக்கிறது. தெலுங்கு தேசம் கட்சியின் அச்ச நாயுடு உண்ணாவிரத போராட்டத்தில் கட்சி தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார். முன்னதாக சந்திரபாபு நாயுடு கைது செய்யப்பட்டதை கண்டித்து ஆந்திரா முழுக்க தெலுங்கு தேச கட்சியினர் கண்டன ஊர்வலங்கள், சாலை மறியல், தர்ணா போராட்டங்களில் ஈடுபட்டனர். உருவ பொம்மைகளை தீயிட்டு கொளுத்தினர். மாநிலம் முழுவதிலும் லாரிகள் ஊர்களின் எல்லையில் பல கிலோ மீட்டர் தொலைவுக்கு நிறுத்தப்பட்டன. மாநிலம் முழுவதிலும் பஸ், லாரி, கார் உள்ளிட்ட அனைத்து வாகனங்கள் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டனர். இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆந்திர மாநிலம் உய்யூர் வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட 7 மண்டலங்களில்வரும்15ம்தேதிவரை144தடைஉத்தரவுபிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. சந்திரபாபு நாயுடு கைது செய்யப்பட்டதை தொடர்ந்து சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த உத்தரவு போடப்பட்டுள்ளது.

## சந்திரயான்3 லேண்டரை படம் பிடித்த சந்திரயான் 2: புகைப்படத்தை வெளியிட்டது இஸ்ரோ

இஸ்ரோ, செப் 10

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முயற்சியால் (இஸ்ரோ) சந்திரனின் தென் துருவத்தில் சந்திரயான்3 விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதனைச் சாதித்த முதல் நாடு என்ற பெருமையை நமது நாடு கொண்டாடி வருகிறது. விக்ரம் லேண்டரில் இருந்து வெளியேறிய பிரக்யான் ரோவர் நிலனின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்று ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வின் மூலம் நிலவில் இரும்பு, அலுமினியம், சல்பர் உள்ளிட்ட கனிமங்கள் இருப்பதை கண்டறிந்து பிரக்யான் ரோவர் உறுதி செய்தது. இதையடுத்த, 14 நாட்கள் தனது ஆய்வு பணிகளை முடித்துக் கொண்ட ரோவர் உறக்க நிலையில் உள்ளது. இந்நிலையில், நிலவில் இருக்கும் சந்திரயான் 3ன் லேண்டரை, சந்திரயான் 2 ஆர்பிட்டர் படம் பிடித்துள்ளது. இதனை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. லேண்டரின் புதிய படமானது, சந்திரயான் 2ன் டிஎப்எஸ்ஏஆர் என்ற ரேடார் கருவி மூலம் கடந்த 6ம் தேதி எடுக்கப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. இருள் சூழ்ந்துள்ள நிலவின் தென்துருவ பகுதியில், லேண்டரின் இருப்பிடத்தை சந்திரயான் 2 படம் பிடித்துள்ளது. சந்திரயான்2ன் இந்த ரேடார் கருவிதான், சந்திரயான்3 நிலவின் தென் துருவத்தில் எங்கு தரையிறங்க வேண்டும் என்பதை தொடர்ந்து புகைப்படும் எடுத்து அனுப்பியது.

## "ஒரே மனிதன், ஒரே அரசு, ஒரே வர்த்தக நிறுவனம்": மோடி மீது காங்கிரஸ் குற்றச்சாட்டு

டெல்லி, செப். 10

ஜி20 நாடுகளின் 18வது உச்சி மாநாடு இந்திய தலைநகர் புது டெல்லியில் தற்போது நடைபெறுகிறது. தொடங்கிய இம்மாநாடு நாளையுடன் முடிவடைகிறது. இம்மாநாட்டின் மையக்கருத்தாக "வசுதைவ குடும்பகம்" எனும் "உலகம் முழுவதும் ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்" எனும் சித்தாந்தம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முழக்கத்தை கிண்டல் செய்யும் விதமாக காங்கிரஸ் கட்சி, பிரதமர் நரேந்திர மோடி மீது குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறது. குஜராத் மாநிலத்தை சேர்ந்த இந்தியாவின் முன்னணி தொழில் நிறுவனமான அதானி குழுமத்தின் மீது நிதி முறைகேடு சம்பந்தமான குற்றச்சாட்டுகளை ஹிண்டன்பர்க் எனும் அமெரிக்க அமைப்பு சில மாதங்களுக்கு முன்பாக அறிக்கை ஒன்றில் வெளியிட்டது. இதனை குறிப்பிட்டு பிரதமர் மீது காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விமர்சனங்களை முன்வைத்துள்ளார். "2014 ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி கருப்பு பண பதுக்கலுக்கான பாதுகாப்பு புகலிடங்களை ஒழிக்க வேண்டும் என கூறியிருந்தார். ஊழல்வாதிகளை காக்கும் விதமாக உள்ள வங்கி பரிவர்த்தனை நடைமுறை சிக்கல்களை மாற்றவும் கோரியிருந்தார். 2018 ஜி20 மாநாட்டில் சொந்த நாட்டில் பொருளாதார குற்றங்களை புரிந்து விட்டு அயல்நாடுகளுக்கு தப்பியோடும் குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும், அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் கோரியிருந்தார்." "ஆனால், அதானி குழுமத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக செபி, சிபிஐ, அமலாக்கத்துறை, வருவாய் புலனாய்வு இயக்குனரகம் மற்றும் தீவிர பணமோசடி விசாரணை அலுவலகம் ஆகியவை எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார்." "ஜி20 மாநாட்டிற்கான முழக்கமாக 'ஓரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பது இருக்கலாம். ஆனால், பிரதமர் 'ஒரே மனிதன், ஒரே அரசாங்கம், ஒரே வர்த்தக நிறுவனம்' எனும் நோக்கத்தைத்தான் நம்புவதாக தெரிகிறது," என்று ஜெய்ராம் ரமேஷ் கூறியிருக்கிறார். அதானி குழுமத்தின் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்க காங்கிரஸ் கோரி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆர்.எம்.வீரப்பனின் 98வது பிறந்த நாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வாழ்த்து



சென்னை, செப். 10

மூத்த திராவிட அரசியல் தலைவரும், எம்.ஜி.ஆர். கழகத்தலைவரும் அ.தி.மு.க முன்னாள் அமைச்சருமான ஆர்.எம். வீரப்பன் இன்று தனது 98வது பிறந்தநாளை கொண்டாடினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆர்.எம். வீரப்பனை சந்தித்து பொன்னாடை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழகத்தில் மூத்த திராவிட அரசியல் தலைவரும், எம்.ஜி.ஆர். கழகத் தலைவரும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சருமான ஆர்.எம். வீரப்பன் இன்று தனது 98வது பிறந்தநாளை கொண்டாடினார். இந்தநிலையில், சென்னை, தியாகராய நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு, சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆர். எம். வீரப்பனை சந்தித்து பொன்னாடை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். அப்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, பொன்முடி, ஜெகத்ரட்சகன் எம்.பி., வர்த்தக அணி செயலாளர் கவிஞர்.காசிமுத்து மாணிக்கம், ஆர்.எம். வீரப்பன் மகன்கள் தங்கராஜ், செல்வம், எம்.ஜி.ஆர்.கழக மாநில பொதுச்செயலாளர் டி.ராமலிங்கம், மருமகன் ராமமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர். தொடர்ந்து, லயோலா கல்லூரி முன்னாள் மாணவர் தலைவர் ஆர். அருண்குமரன், மாநில மகளிர் அணிசெயலாளர் ஆர்.அபிராமி, மாநில அமைப்புச் செயலாளர் சுப.தமிழ்வேலன், வட சென்னை மாவட்ட செயலாளர் என்.துரைராஜ், திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் டி.ஸ்ரீனிவாசன், தென்சென்னை மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.சிவராமன், தென் சென்னை மகளிர் அணி செயலாளர் ஜி.அமுதா, கரூர் மாவட்ட செயலாளர் இரா.பெரிய சாமி, தூத்துக்குடி மாவட்ட செயலாளர் கே.அழகிரி சாமி, திருச்சி மாவட்டச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், திருவண்ணாமலை மாவட்ட செயலாளர் கே.குமார், நாமக்கல் மாவட்ட செயலாளர் வி.வெள்ளையன், தென்காசி மாவட்ட செயலாளர் டேனியல், ஜி.மீனாட்சி சுந்தரம், அ.அனந்தன், சேலம் மாவட்ட செயலாளர் கே. எம், ஆறுமுகம், அரியலூர் மாவட்ட செயலாளர் ஜி.மணிவேல், ஈரோடு மாவட்ட செயலாளர் வி.எல்.தங்கராஜ், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் எம்.சக்திவேல், ஆர்.எம்.வீரப்பன் மக்கள் நற்பணி மன்ற பொருளாளர் அண்ணாதுரை, தி.மு.க. வர்த்தக அணி நிர்வாகிகள் மகேந்திரன், சரவணன், பூங்கொடி ஆர். கோவிந்தராஜன், சத்யா, ஜெகதீசன், தியாகராஜன், தர்மராஜ் மற்றும் சங்கர் உட்பட பலர் ஆர்.எம். வீரப்பனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

# முறைகேடு புகார்: திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க., நிர்வாகி கட்சியில் இருந்து நிரந்தரமாக நீக்கம்



திருப்பூர், செப். 10

ராஜ்மோகன்குமார் தி.மு.க.வில் இருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரோடு கட்சியினர் எந்த தொடர்பும் வைத்து கொள்ளக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் வடக்கு மாவட்ட முன்னாள் வர்த்தக அணி அமைப்பாளர் ராஜ்மோகன்குமார். இவர் போலி பாஸ்போர்ட் வழக்கில் கைதானதையடுத்து தி.மு.க.வில் இருந்து சஸ்பெண்டு செய்யப்பட்டார். தற்போது கட்சியின் முக்கிய பிரமுகர்களின் பெயர்களை பயன்படுத்தி முறைகேடுகளில் ஈடுபட்டதாக புகார்கள் எழுந்ததையடுத்து ராஜ்மோகன்குமார் தி.மு.க.வில் இருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையிலும் ராஜ்மோகன்குமார் செயல்பட்டு வந்ததால் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்பில் இருந்து நிரந்தரமாக நீக்கி வைக்கப்படுகிறார். அவரோடு கட்சியினர் எந்த தொடர்பும் வைத்து கொள்ளக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவினாசியில் காங்கிரஸ் செயற்குழு கூட்டம்



அவினாசி, செப். 11

காங்கிரஸ் செயற்குழு கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட தலைவர் கோபி பழனியப்பன் தலைமை தாங்கினார். பல்லடத்தில் கொலை செய்யப்பட்ட 4பேரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிக்க வேண்டும் என கூறினர்.

திருப்பூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் செயற்குழு கூட்டம் அவினாசியில் உள்ள ஒரு அரங்கில் நடந்தது. வடக்கு மாவட்ட தலைவர் கோபி பழனியப்பன் தலைமை தாங்கினார். மேற்கு வட்டார தலைவர் கொங்கு தங்கமுத்து, வடக்கு வட்டாரத்தலைவர் லட்சுமணசாமி, கிழக்கு வட்டாரத்தலைவர் குமாரசாமி, அவினாசி நகர தலைவர் பொண்ணு குட்டி, மாநில பொதுக்குழு உறுப்பினர் மகாலிங்கம், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கு பூத்கமிட்டி புதுப்பிப்பது, வட்டாரத் தலைவர்கள் நகரத்தலைவர்கள் இல்லத்திலேயே காங்கிரஸ் பேரியக்க மூவர்ணக்கொடிகளை பறக்க விடுவது. ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கு தயாராகும் விதமாக அனைத்து வட்டார நகர தலைவர்களும் தங்களது கமிட்டிகளை உடனடியாக அமைப்பது. அந்தந்த வட்டாரத்திற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களில் அதிகப்படியான உறுப்பினர்களை சேர்த்து தேர்தலில் போட்டியிட முயற்சித்தல், வட்டார, நகரத்திற்குட்பட்ட இடங்களில் காங்கிரஸ் கட்சியின் அசையா சொத்துக்கள் இருப்பின் அதை மீட்டெடுக்க மாவட்ட கமிட்டிக்கு தகவல் தெரிவித்தல், தங்கள் பகுதிகளில் உள்ள கோவில்களில் இறைப்பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் அறங்காவலர் குழு உறுப்பினர்களுக்கு விண்ணப்பித்தல், பல்லடத்தில் கொலை செய்யப்பட்ட 4பேரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திருப்பூர் தெற்கு ஒன்றியத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் தொடக்கம்



திருப்பூர், செப். 10

திருப்பூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வழிகாட்டுதலின் படி, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி புதிய பாரத எழுத்தறிவு திடடம் திருப்பூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட 83 மையங்களில் தொடங்கப்பட்டது. திருப்பூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட நொய்யல் வீதி மாநகராட்சி துவக்கப்பள்ளியின் குடியிருப்பு பகுதியில் துவக்கப்பட்டுள்ள மையத்தில் திருப்பூர் மாவட்ட உதவித் திட்ட அலுவலர் அண்ணாதுரை தலைமையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. பள்ளி தலைமை ஆசிரியர் திவசந்தி மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் கீதா ஆகியோர் உடனிருந்தனர். தன்னார்வலர் பௌஜியா பேகம் கற்போருக்கு பாடம் கற்பித்தார். பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி புதிய பாரத எழுத்தறிவு திட்டமானது 2022 முதல் 2027 வரை செயல்படுத்தப்பட உள்ளது. கற்றல் மையங்களை, பள்ளிகள், கற்போர் குடியிருப்பு பகுதி, நூறு நாள்வேலை திட்டம் நடைபெறும் இடம் மற்றும் கற்போர் பணிபுரியும் தொழிற்சாலை வளாகம் ஆகியவற்றில் கற்போருக்கு ஏதுவான ஒரு இடத்தை தேர்வு செய்து அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கற்போருக்கு எழுத்துக்களை அடையாளம் காணுதல், சொற்களின் வரிவடிவத்தை அறிதல், பிறர் உதவியின்றி எழுதுதல் மற்றும் வாசித்தல், 1 முதல் 1000 வரை எண்களை எழுதுதல், கூட்டல், கழித்தல் கணக்குகள் செய்தல், கடிகாரத்தில் நேரமறிதல், பயணச்சீட்டு முன்பதிவு, பீம் செயலி போன்றவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல், சட்ட அறிவு, பணமில்லா பரிவர்த்தனை மற்றும் உடல்நலமும் சுகாதாரமும் போன்றவற்றை கற்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# உடுமலையில் குறு மைய விளையாட்டுப்போட்டி



உடுமலை, செப். 10

உடுமலை ,மடத்துக்குளம், குடிமங்கலம் ,ஒன்றியத்தில் உள்ள அரசு உயர்நிலை ,மேல்நிலைப் பள்ளி மெட்ரிக் பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான குறுமைய விளையாட்டுப்போட்டிகள் உடுமலை அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் துவங்கியது. போட்டிகளை ஆதிராவிட நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். மொத்தம் 16 பள்ளிகளை சேர்ந்த 1680 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பரிசு வழங்கினார். விழாவில் கோட்டாட்சியர் ஜஸ்வந்த்கண்ணன், நகரதிமுக ., செயலாளர் வேலுச்சாமி, பொருளாளர் முபாரக் அலி, நகராட்சி துணை தலைவர் கலைராஜன் . ஒன்றிய திமுக ., செயலாளர் செழியன் ,செந்தில்குமார், மெஞ்ஞானமூர்த்தி, உடுமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் மகாலட்சுமி முருகன், ஊராட்சி தலைவர்கள் போடிபட்டி சௌந்தர்ராஜ், கணக்கம்பாளையம் காமாட்சி அய்யாவு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேகத்தடை அமைக்க கோரி பல்லடத்தில் பொதுமக்கள் சாலை மறியல்



பல்லடம், செப். 11

கிருஷ்ணகிரியை சேர்ந் தமுகமதுஅமிர் என்பவர் மகன் சபியுல்லா (வயது 37). இவர் கடந்த சில வருடங்களாக பல்லடம் அருகே உள்ள மகாலட்சுமி நகரில் குடும்பத்துடன் வசித்து வந்தார். அதே பகுதியில் இரு சக்கர வாகன பழுது பார்ப்பு ஓர்க் ஷாப் வைத்து நடத்தி வந்தார். இந்த நிலையில் சம்பவத்தன்று பல்லடம் செட்டிபாளையம் சாலையில் சின்னிய கவுண்டம்பாளையத்திற்கு செல்வதற்காக மின்சார மோட்டார் சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார். சின்னிய கவுண்டம்பாளையம் பிரிவு அருகே செல்லும் போது, எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த கார், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, முன்னாள் சென்ற ஒரு மோட்டார் சைக்கிள் மீது மோதிவிட்டு, அப்படியும் நிற்காமல் எதிரே வந்த சபியுல்லா ஓட்டி வந்த மின்சார மோட்டார் சைக்கிள் மீது மோதியது இதில் அவர் தூக்கி வீசப்பட்டு ரோட்டில் விழுந்தார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதை எடுத்து அக்கம் பக்கம் உள்ளவர்கள் அவரை மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை சபியுல்லா பரிசோதித்த டாக்டர் ஏற்கனவே சபியுல்லா இறந்து விட்டதாக தெரிவித்தார். இந்த விபத்து குறித்து அவரது மனைவி அம்மு கொடுத்த புகாரின் பேரில் பல்லடம் போலீசார் காரை ஓட்டி வந்த கேரளாவைச் சேர்ந்த சேது என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதற்கிடையே சின்னிய கவுண்டம்பாளையம் பிரிவில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகிறது என்றும் அங்கு வேகத்தடை அமைக்க வேண்டும் என்று நெடுஞ்சாலை துறையினரிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் வேகத்தடை அமைக்க வில்லை என்று கூறி விபத்து ஏற்பட்ட இடத்தில் அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து சம்பவ இடம் வந்த பல்லடம் போலீசார், பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். பின்னர் தற்காலிகமாக சாலை தடுப்புகள் வைத்தனர். இதை யடுத்து அங்கிருந்து பல்லடம் நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதைத் தொடர்ந்து அவர்களிடம் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர். விரைவில் வேகத்தடை அமைக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்ததை அடுத்து பொதுமக்கள் கலைந்து சென்றனர் இதனால் நெடுஞ்சாலைதுறை அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# பல்லடத்தில் தி.மு.க., வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்



பல்லடம், செப். 10

பல்லடம் மேற்கு ஒன்றிய திமுக., வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் மேற்கு ஒன்றிய திமுக., அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர் சு.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. திருப்பூர் திமுக., வடக்கு மாவட்ட துணை செயலாளர் வக்கீல் குமார், திருப்பூர் மாநகராட்சி கவுன்சிலர் ரா தாகிருஷ்ணன் பல்லடம் ஒன்றிய குழு தலைவர் தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய பொருளாளர் அம்மாபாளையம் குமார் வரவேற்றார். இந்த ஆலோசனை கூட்டத்தில் திருப்பூர் திமுக., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் நடராஜன் சிறப்புரையாற்றினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும், திமுக., மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றியடைய செய்ய வேண்டும், கோவை பாராளுமன்ற தொகுதியில் பல்லடம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் திமுக ., கூட்டணி வேட்பாளருக்கு அதிக வாக்குகள் பெற பாடுபட வேண்டும். அனைத்து தொகுதிகளிலும் தலைவர் மு.க.ஸ்டாலின் போட்டியிடுவதாக நினைத்து வெற்றிக்கு பாடுபட வேண்டும் என உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்த ஆலோசனை கூட்டத்தில் மேற்கு ஒன்றிய திமுக., நிர்வாகிகள் சாமிநாதன், துரை முருகன், ராஜேஸ்வரன், ரங்கசாமி, பிரகாஷ், சுரேஷ், பானுமதி, மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கார் டிரைவர் மீது தாக்குதல்

அவினாசி, செப். 10

அவினாசியை அடுத்து வாரணாசி பாளையம் குருவாயூரப்பன் நகரை சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 31). இவர் டாக்சி டிரைவராக உள்ளார். தனது காரை பெருமாநல்லூர் திருப்பூர் ரோட்டில் பூலுவபட்டி நால்ரோடு அருகே நிறுத்தி உள்ளார்.

அப்போது அதே பகுதியில் பயணிகளை ஏற்றி, இறக்கிசெல்லும் ஆட்டோ டிரைவர்கள் 10க்கும் மேற்பட்டோர் மணிகண்டனிடம் இந்த பகுதியில் ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது. காரைநிறுத்தக்கூடாது என கூறியதாக தெரிகிறது .அதற்கு மணிகண்டன், பயணிகள் மொபைல் போன் மூலம் புக் செய்து தான் செல்கிறார்கள்.

எல்லோரையும் ஏற்றி செல்வதில்லை. எதற்காக இங்கு நிறுத்த வேண்டாம் என்கிறீர்கள் என கேட்டுள்ளார்.

இதில் வாக்குவாதம் ஏற்பட்டு ஆட்டோ டிரைவர்கள் மணிகண்டனை தாக்கி உள்ளனர்.

இதனை கண்டித்தும் ஆட்டோ டிரைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அவினாசி தாசில்தாரிடம் டாக்சி டிரைவர்கள் மனு கொடுத்தனர்.

# சம்பளம் குறைவாக வழங்கியதால் பல்லடத்தில் தூய்மைப்பணியாளர்கள் வேலைநிறுத்தம்



பல்லடம், செப். 10

தினசரி ரூ .440 சம்பளம் வழங்க ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் 181 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

பல்லடம் நகராட்சியில் மொத்தம் 18 வார்டுகள் உள்ளது. சுமார் 56,000 மக்கள் வசித்து வருகின்றனர். இந்தநிலையில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 36, ஒப்பந்த அடிப்படையில் 181 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பல்லடம் நகராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் குப்பை கழிவுகளை தனித்தனியாக பிரித்து வாங்குவதற்கு தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நாள்தோறும் 18 வார்டுகளில் வீதி வீதியாக சென்று வீடுகளில் உள்ள குப்பைகளை சேகரித்து வருகின்றனர். இதற்கிடையே கடந்த மாதம் சம்பளம் சரியாக வழங்காததால் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். கலெக்டர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்று அதன் அடிப்படையில் தினசரி ரூ .440 சம்பளம் வழங்க ஒப்பந்தம் போடப்பட்டது. இந்தநிலையில் இந்த மாதம் ரூ.420 மட்டுமே வழங்கப்பட்டதாகவும்,, 20 ரூபாய் பிடித்தம் செய்துள்ளதாகவும், உடனடியாக ஒப்பந்த சம்பளத்தை வழங்க வலியுறுத்தி பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்களுடன் நகராட்சி ஆணையாளர் முத்துசாமி பேச்சு வார்த்தை நடத்தினார். போராட்டத்தையொட்டி பல்லடம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# விடுதலை பறவைகள் கட்சி சார்பில் கருணாநிதிக்கு தங்க சிலை நிறுவன தலைவர் டெல்லி ராஜா



காஞ்சிர்புஅம், செப். 11

கால் கோள் விழா இந்த மாதம் 29ந் தேதி நடக்கிறது. பெங்களூர் சாலை காரையில் உள்ள விடுதலை பறவைகள் கட்சி அலுவலகம் அருகில் தங்கத்தில் சிலை அமைக்கப் படுகிறது.

விடுதலை பறவைகள் கட்சி நிறுவன தலைவர் டெல்லி ராஜா சமூக நல அறக்கட்டளை சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு காஞ்சிபுரம் மாவட்டம் பெங்களூர் சாலை காரையில் உள்ள விடுதலை பறவைகள் கட்சி அலுவலகம் அருகில் தங்கத்தில் சிலை அமைக்கப்படுகிறது.

இதற்காக கால் கோள் விழா இந்த மாதம் 29ந் தேதி நடக்கிறது.

தங்க சிலை அமைக்க தமிழகம் முழுவதும் விடுதலை பறவைகள் கட்சி சார்பில் பல்சுவை நிகழ்ச்சிகளை நடத்தி நிதி திரட்ட முடிவு செய்யப் பட்டுள்ளது. கலைஞர் கருணாநிதியின் தங்க சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பிரதமர் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டு திறந்து வைக்கிறார்கள் என்று கட்சியின் நிறுவன தலைவர் டெல்லி ராஜா கூறினார்.

# சென்னையில் இருந்து ஆந்திராவுக்கு பஸ் போக்குவரத்து சீரானது



சென்னை, செப். 11

காலையில் இருந்து ஆந்திராவுக்கு பஸ்கள் இயக்கப்படவில்லை. ஆந்திர மாநிலத்தில் பஸ்களை இயக்க அனுமதி கிடைத்ததை தொடர்ந்து பஸ்கள் ஒவ்வொன்றாகபுறப்பட்டு சென்றன.

ஆந்திர மாநில முன்னாள் முதல்மந்திரி சந்திர பாபு நாயுடு கைது செய்யப்பட்டதை அடுத்து தமிழகஆந்திர மாநிலத்திற்கு இடையே பஸ் சேவை பாதிக்கப்பட்டு உள்ளது. சென்னையில் இருந்து திருப்பதி, நெல்லூர், விஜயவாடா, காளஹஸ்தி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு இரு மாநில பஸ்களும் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இன்று காலையில் இருந்து ஆந்திராவுக்கு பஸ்கள் இயக்கப்படவில்லை. காலை 10 மணிக்கு மேல் பஸ் போக்குவரத்து சீரானது. அதைத் தொடர்ந்து தமிழகஆந்திரா அரசு பஸ்கள் இயக்கப்பட்டன. ஆந்திர மாநிலத்தில் பஸ்களை இயக்க அனுமதி கிடைத்ததை தொடர்ந்து பஸ்கள் ஒவ்வொன்றாக புறப்பட்டு சென்றன.

# பஸ்சில் தனியாக பயணித்த பெண் என்ஜி.ரிடம் 'சில்மிஷம்' செய்த வாலிபர்

நாகர்கோவில், செப். 10

பஸ்ஸில் இருந்த சக பயணிகளும் அந்த பெண்ணுக்கு ஆதரவாக வாலிபரை தாக்கினார்கள். பஸ்சில் நடந்த சம்பவங்களை அந்த இளம் பெண் நாகர்கோவிலில் உள்ள தனது பெற்றோரிடம் தெரிவித்தார்.

நாகர்கோவில் பகுதியை சேர்ந்த 23 வயது இளம் பெண் ஒருவர், கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள ஐ.டி. நிறுவனம் ஒன்றில் என்ஜினீயராக வேலை பார்த்து வருகிறார். அந்த பெண் அங்கேயே தங்கி வேலை பார்க்கிறார். வாரத்தின் கடைசி நாட்களில் ஊருக்கு வருவது வழக்கம். அதேபோல் நேற்று இரவு வேலை முடிந்ததையடுத்து, இன்று அதிகாலை ஊருக்கு புறப்பட்டார். திருவனந்தபுரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு வந்த கேரளா அரசு பஸ்ஸில் பயணம் செய்தார். இளம்பெண்ணின் பின்னால் இருந்த இருக்கையில் வாலிபர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் பஸ்புறப்பட்ட சிறிது நேரத்திலேயே முன் சீட்டில் அமர்ந்திருந்த பெண் என்ஜினியரிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டார். இதையடுத்து அந்த இளம்பெண், வாலிபரை எச்சரித்தார். இதனால் உஷாரான அந்த வாலிபர் சிறிது நேரம் எதுவும் செய்யாமல் இருந்தார். பின்பு மீண்டும் இளம்பெண்ணிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டார். இதனால் ஆத்திரமடைந்த இளம்பெண் கூச்சலிட்டதுடன், அந்த வாலிபரை சரமாரியாக தாக்கினார். அப்போது பஸ்ஸில் இருந்த சக பயணிகளும் அந்த பெண்ணுக்கு ஆதரவாக வாலிபரை தாக்கினார்கள். இதைத் தொடர்ந்து அந்த வாலிபர் மார்த்தாண்டத்தில் பஸ்சைவிட்டு இறங்க முயன்றார். ஆனால் அவரை பஸ்சை விட்டு இறங்கவிடாமல் நாகர்கோவிலுக்கு அழைத்து வந்தனர். பஸ்சில் நடந்த சம்பவங்களை அந்த இளம் பெண் நாகர்கோவிலில் உள்ள தனது பெற்றோரிடம் தெரிவித்தார். அவர்கள் வடசேரி போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். அந்த பஸ் வடசேரி பஸ் நிலையத்திற்கு வந்ததும், இளம் பெண்ணிடம் சில்மிஷம் செய்த வாலிபர் பஸ்சை விட்டு இறங்கினார். அப்போது அவரை போலீசார் சுற்றி வளைத்து பிடித்தனர். பிடிபட்ட வாலிபரை வடசேரி போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்தனர். அப்போது அவர் மதுரை பகுதியை சேர்ந்தவர் என்பதும், என்ஜினீயராக இருப்பதாகவும் கூறினார். மேலும் அவர் நண்பர் ஒருவரை பார்த்துவிட்டு ஊருக்கு செல்வதாக தெரிவித்தார். இதையடுத்து போலீசார் அவரை எச்சரித்து அங்கிருந்து அனுப்பி வைத்தனர். ஓடும் பஸ்ஸில் பெண் என்ஜினீயரிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட வாலிபருக்கு சக பயணிகள் தர்ம அடி கொடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# கோயம்பேடு மார்க்கெட்டில் தக்காளி விலை வீழ்ச்சி

போரூர், செப். 10

கடந்த மாத தொடக்கத்தில் வரத்து குறைவால் தக்காளியின்விலைஉச்சத்தை எட்டியது. சில்லரை விற்பனை கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.200 வரை விற்கப்பட்டது. இதனால் இல்லத்தரசிகள் பெரிதும் கவலை அடைந்தனர். இந்த நிலையில் கடந்த 2 வாரங்களாக தக்காளியின் வரத்து மீண்டும் படிப்படியாக அதிகரிக்க தொடங்கியதால் அதன் விலை குறைய தொடங்கியது. கடந்த வாரம் மொத்த விற்பனைகடைகளில் ஒரு கிலோ ரூ.18க்கும் சில்லரை விற்பனை கடைகளில் ஒரு கிலோ ரூ.25 க்கும் தக்காளி விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் இன்று 55 லாரிகளில் தக்காளி விற்பனைக்கு குவிந்துள்ளது.

இதையடுத்து தக்காளியின் விலை கடும் வீழ்ச்சி அடைந்து உள்ளது. மொத்த விற்பனைகடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.9க்கு விற்கப்படுகிறது. வெளி மார்க்கெட்டில் உள்ள காய்கறி மற்றும் மளிகை கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.15க்கு விற்கப்படுகிறது.

கோயம்பேடு மார்க்கெட்டில் இன்றைய காய்கறிகள் மொத்த விற்பனை விலை விபரம் வருமாறு (கிலோவில்): பீன்ஸ்ரூ.50, ஊட்டி கேரட் ரூ.40, பீட்ரூட்ரூ.20, அவரைக்காய் ரூ.55, வெள்ளரிக்காய் ரூ.20, உஜாலா கத்தரிக்காய் ரூ.15, வரி கத்தரிக்காய் ரூ.10, வெண்டைக்காய் ரூ.10, பீர்க்கங்காய்ரூ.20, புடலங்காய்ரூ.15, முட்டைகோஸ்ரூ.8, கோவக்காய்ரூ.8, பட்டை கொத்தவரங்காய்ரூ.20, நைஸ் கொத்தவரங்காய் ரூ.40, பச்சை மிளகாய் ரூ.30, இஞ்சிரூ.240, புது இஞ்சி ரூ.80க்கு விற்கப்படுகிறது.

# பொன்னேரி அருகே அ.ம.மு.க. நிர்வாகி வீட்டில் பூட்டை உடைத்து கொள்ளை

பொன்னேரி, செப். 11

பொன்னேரியை அடுத்த டிவி புரம் இந்திரா தெரு பகுதியைச் சேர்ந்தவர் வச்சலா (57). இவர் அம்மா மக்கள் முன்னேற்ற கழக சுற்றுச்சூழல் மாவட்ட செயலாளராக பதவி வகித்து வருகிறார். நேற்று இரவுவீட்டைபூட்டிவிட்டு உறங்கிய நிலையில் மர்ம நபர்கள் பின்பக்கம் சுவர் ஏறி குதித்து வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்றுள்ளனர். பின்னர் பீரோவில் இருந்த கைப் பையில் 4200 ரூபாய் ரொக்கம் பணம் 7500 ரூபாய் மதிப்புள்ள 90 அமெரிக்க டாலர் ஆகியவற்றை எடுத்துள்ளனர். மற்றொரு அறையின் பூட்டைத் திறந்து ரூ.80 ஆயிரம் மதிப்புள்ள ஆப்பிள் வாட்ச்சையும் எடுத்துக் கொண்டு வீட்டை பூட்டி சாவியை உள்ளே போட்டு விட்டு தப்பி ஓடிவிட்டனர் . இந்த நிலையில் வச்சலா சிறிது நேரம் கழித்து வெளியே வந்து பார்த்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இதுகுறித்து பொன்னேரி போலீஸ் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சின்னத்துரை மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு அருகில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து விசாரணை செய்து வருகின்றனர். சுற்றி குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் கொள்ளை சம்பவம் நடந்திருப்பது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சென்னிமலை அருகே தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த வயதான தம்பதி படுகொலை



சென்னிமலை, செப். 11

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அடுத்த முருங்கதொழுவு ஊராட்சிக்கு உட்பட்ட ஒட்டன்குட்டை அருகே கரியங்காட்டு தோட்டம் பகுதியை சேர்ந்தவர் முத்துசாமி (85). விவசாயி. இவரது மனைவி சாமியாத்தாள்(80). இவர்களுக்கு வசந்தி, கவிதா, கலையரசி என திருமணமான 3 மகள்கள் உள்ளனர். அனைவரும் தனியாக வசித்து வருகிறார்கள். முத்துசாமியும், சாமியாத்தாளும் தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்தனர். நேற்று இரவு முத்துசாமியும், சாமியாத்தாளும் வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டு வீட்டில் தூங்கினர். இந்நிலையில் நள்ளிரவில் முத்துசாமியின் வீட்டின் கதவை கம்பியால் நெம்பி, கதவை திறந்து உள்ளே நுழைந்த மர்மநபர்கள் தூங்கி கொண்டிருந்த முத்துசாமியை இரும்பு கம்பியால் தாக்கியும், அரிவாளால் வெட்டினர். சத்தம் கேட்டு எழுந்த சாமியாத்தாளையும் மர்மநபர்கள் இரும்பு ராடு மற்றும் அரிவாளால் வெட்டினர். இதில் முத்துசாமியும், சாமியாத்தாளும் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தனர். இந்நிலையில் முத்துசாமியின் மகள் கலையரசியின் மகனான அஜித் (23) தாத்தா, பாட்டியை பார்ப்பதற்காக இன்று காலை வீட்டிற்கு வந்தார். வீட்டின் கதவு திறந்திருந்ததால் வீட்டிற்குள் அஜித் சென்றார். அப்போது வீட்டில் ரத்த வெள்ளத்தில் தாத்தாவும், பாட்டியும் கொலை செய்யப்பட்டிருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து கூச்சல் போட்டார். இது குறித்து தகவல் அறிந்த சென்னிமலை போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன், டி.எஸ்.பி. ஜெயபாலு தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து முத்துசாமி, சாமியாத்தாள் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

வீட்டினுள் இருந்த பீரோ உடைக்கப்பட்டு அதில் இருந்த பொருட்கள் சிதறி கிடந்தன. சம்பவ இடத்திற்கு போலீஸ் மோப்ப நாய் வீரா வரவழைக்கப்பட்டது. அது அருகில் உள்ள வாழைத்தோட்டம் மற்றும் அருகே உள்ள சாலையில் சிறு தூரம் ஓடி நின்றது. யாரையும் கவ்வி பிடிக்கவில்லை. கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கொலை சம்பவம் நடந்த வீட்டில் பதிவான மர்மநபர்களின் கைரேகைகள், அவர்கள் விட்டு சென்ற தடயங்களை கைப்பற்றினர். சென்னிமலையில் வயதான தம்பதி வீடு புகுந்து கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருப்பதாக வந்த தகவலின்பேரில் ஈரோடு போலீஸ் சூப்பிரண்டு ஜவகர் இன்று காலை கொலை நடந்த வீட்டிற்கு வந்து நேரில் விசாரணை நடத்தினார். மேலும், டி.எஸ்.பி. ஜெயபாலு, இன்ஸ்பெக்டர் சரவணனிடம் கைப்பற்றப்பட்ட தடயங்கள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து கொலையாளிகளை விரைந்து பிடிக்க உத்தரவிட்டார். போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் நகை, பணத்திற்காக இந்த கொலை நடந்தது தெரியவந்தது. முதற்கட்டமாக மூதாட்டி கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் நகை, அவர் கையில் அணிந்திருந்த மோதிரம் வளையல்கள் கொள்ளை போய் இருப்பது தெரியவந்தது. அதே நேரம் வீட்டில் உள்ள பீரோ உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறி கிடந்தன. பீரோவில் எவ்வளவு நகைகள், எவ்வளவு பணம் இருந்தது என்ற விவரம் உடனடியாக தெரியவில்லை. இது குறித்து சென்னிமலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கொலையான முத்துசாமி அவரது வீட்டில் பாதுகாப்பிற்காக செல்லப்பிராணியாக நாய் ஒன்றை வளர்த்து வந்துள்ளார். இந்த நாய் கடந்த ஒரு வாரத்திற்கு முன் திடீரென மர்மமான முறையில் இறந்து கிடந்தது. இதனால் முத்துசாமியின் வீட்டில் கொள்ளையடிக்க மர்மநபர்கள் திட்டம் திட்டி கடந்த ஒரு வாரத்திற்கு முன்பே முத்துசாமியின் வீட்டில் வளர்த்த நாய்க்கு விஷம் தடவிய பொருளை சாப்பிட கொடுத்து கொலை செய்துள்ளனர். பின்னர் மர்மநபர்கள் நேற்று இரவு முத்துசாமி வீட்டிற்குள் நுழைந்து முத்துசாமியையும், சாமியாத்தாளையும் கொலை செய்து நகை, பணத்தை கொள்ளையடித்து சென்றிருக்கலாம் என போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது. இதேபோல் கடந்த 16 மாதங்களுக்கு முன்பு குட்டைக்காடு என்ற பகுதியில் வயதான தம்பதியர்கள் தனியாக வசித்து வந்த நிலையில் மர்மநபர்கள் வீட்டுக்குள் புகுந்து முதியவரை வெட்டி படுகொலை செய்து பணம் நகையை கொள்ளையடித்து சென்றனர். மேலும் மூதாட்டிக்கும் வெட்டுக்காயம் விழுந்தது. அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்த்தப்பினார். இந்த சம்பவத்தில் இது வரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கானூர், பசூரில் 11ந்தேதி மின்தடை

அவினாசி, செப். 10

அவிநாசி மின்வாரிய செயற்பொறியாளர் பரஞ்ஜோதி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: கானூர் புதூர் துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் வருகிற 11ந் தேதி (திங்கட்கிழமை) இந்த துணை மின்நிலையத்தில் மின்சாரம் நிறுத்தம் செய்யப்படுகிறது. அதன்படி அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கானூர், அல்லப்பாளையம், கஞ்சப்பள்ளி, ராமநாதபுரம், செட்டிபுதூர் / ஆலத்தூர், தொட்டிபாளையம், மொண்டிபாளையம், குமாரபாளையம், தாசராபாளையம், ஆம்போதி, பசூர் ஒரு பகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒரு பகுதி ஆகிய பகுதிகளில் மின்வினியோகம் இருக்காது. இதேபோல் பசூர் துணை மின் நிலையத்திலும் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பசூர், பூசாரிப்பாளையம், இடையர்பாளையம், செல்லனூர், ஆயிமாபுதூர், ஒட்டர்பாளையம், ஜீவா நகர், அன்னூர் மேட்டுப்பாளையம், மேட்டுக்காடு புதூர், அம்மாசெட்டிபுதூர் , புதுப்பாளையம்| பூலுவபாளையம் ஆகிய பகுதிகளில் மின்வினியோகம் இருக்காது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு பஸ்சை மறித்து டிரைவர், கண்டக்டர் தாக்குதல்: சிறுவன் உள்பட 3 பேர் கைது

தூத்துக்குடி, செப். 10

பஸ் புதுக்கோட்டைக்கு பஸ் வந்தபோது, அங்கு மோட்டார்சைக்கிள்களில் வந்த 7 வாலிபர்கள் பஸ்சை வழிமறித்து நிறுத்தினர். வாலிபர் தனது நண்பர்களுக்கு தகவல் தெரிவித்தார். உடனே அவர்கள் 6 பேரும் மோட்டார் சைக்கிள்களில் சுங்கச்சாவடிக்கு வந்தனர்.

தூத்துக்குடியில் இருந்து நாகர்கோவில் நோக்கி நேற்று முன்தினம் இரவு ஒரு அரசு பஸ் புறப்பட்டு சென்றது. அந்த பஸ்சை நாகர்கோவில் கே.கே. நகரை சேர்ந்த டிரைவர் சணல்குமார் (வயது 50) ஓட்டினார். நாகர்கோவில் அம்மாண்டிவிளையை சேர்ந்த தனசேகர் (50) கண்டக்டராக பணியாற்றினார். பஸ் புதுக்கோட்டைக்கு பஸ் வந்தபோது, அங்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த 7 வாலிபர்கள் பஸ்சை வழிமறித்து நிறுத்தினர். நண்பர்களான அவர்கள் தங்களில் ஒருவரை பஸ்சில் ஏற்றி அனுப்பி வைத்தனர். அந்த வாலிபர் குடிபோதையில் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் அந்த வாலிபருக்கும், கண்டக்டர் தனசேகருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றவே வாகைகுளம் சுங்கச்சாவடி அருகே அந்த வாலிபரை கண்டக்டர் பஸ்சில் இருந்து கீழே இறக்கி விட்டு விட்டு சென்றார். இதுகுறித்து வாலிபர் தனது நண்பர்களுக்கு தகவல் தெரிவித்தார். உடனே அவர்கள் 6 பேரும் மோட்டார் சைக்கிள்களில் சுங்கச்சாவடிக்கு வந்தனர். அவர்கள் நண்பரையும் அழைத்துக் கொண்டு அந்த பஸ்சை விரட்டி சென்றனர். சில கிலோ மீட்டர் தொலைவில் அந்த பஸ்சை வழிமறித்து நிறுத்தி பஸ்சின் முன்பக்க கண்ணாடியை கல்லால் தாக்கி சேதப்படுத்தினர். அதன்பிறகு டிரைவர், கண்டக்டரிடம் தகராறு செய்து தாக்கினர். இதில் அவர்கள் காயம் அடைந்தனர். பின்னர் 7 பேரும் அங்கிருந்து தப்பி சென்று விட்டனர். இதற்கிடையே இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது. இது தொடர்பாக புதுக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் வின்சென்ட் அன்பரசி, சப் இன்ஸ்பெக்டர் ஞானராஜ் மற்றும் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அதில் இச்சம்பவத்தில் ஈடுபட்டது தூத்துக்குடி அண்ணா நகர் 5வது தெரு காளீஸ்வரன் (வயது26), 6வது தெரு அருண்குமார் (18) மற்றும் 14 வயது சிறுவன் என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் தாக்குதலில் ஈடுபட்டது தொடர்பாக முனீஸ்வரன் (24) உட்பட மேலும் 6 பேரை தேடி வருகின்றனர்.

# பரனூர் டோல்கேட் முன்பு சுங்கவரி வசூலை கண்டித்து தே.மு.தி.க. ஆர்ப்பாட்டம்



செங்கல்பட்டு, செப். 10

செங்கல்பட்டு அடுத்த பரனூர் டோல்கேட் 2005ம் ஆண்டு சுங்கவரி கட்டண வசூலை தொடங்கும்போது காருக்கு ரூபாய் 20, பஸ் மற்றும் லாரிகளுக்கு ரூபாய் 55, கனரக வாகனங்களுக்கு ரூபாய் 75 என்று சுங்க கட்டணம் வசூலித்தது.

தற்போது படிப்படியாக உயர்ந்து 2023ம் ஆண்டு காருக்கு ரூபாய் 70, பஸ் மற்றும் லாரிகளுக்கு ரூபாய் 230, கனரக வாகனங்களுக்கு ரூபாய் 375 என்று கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இதனால் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை விலை உயருகிறது. சுங்கவரி கட்டணத்தால் ஏழை எளிய வாகன ஓட்டிகள் மிகவும் அவதிக்குள்ளாகினர். பரனூர் டோல்கேட் 2019ம் ஆண்டு காலாவதி ஆகி விட்டதாக கூறுகின்றனர்.

தற்போது வரை பரனூர் டோல்கேட்டில் சுங்கவரி கட்டணம் வசூலிப்பதை கண்டித்தும் மற்றும் 2019ம் ஆண்டு காலாவதியான டோல்கேட்டை இழுத்து மூட வலியுறுத்தியும் செங்கல்பட்டு மாவட்ட தே.மு.தி.க சார்பில் மாவட்ட செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ அனகை முருகேசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் பரனூர் டோல்கேட் முன்பு நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் எத்திராஜ், மாவட்ட துணை செயலாளர் லயன் நாகராஜ், நகர செயலாளர்கள் முருகன், விஜயக்குமார், ஜெயபால், மாவட்ட பொருளாளர் பிரகாஷ், மாவட்ட துணை செயலாளர் செழியன், ஒன்றிய நிர்வாகிகள் கோபிநாத், கஸ்தூரி, சக்திவேல், பாண்டியன், ராஜ்குமாரன், எம்.ஜி.மூர்த்தி, ரமேஷ்பிரபாகரன், பொன்னுசாமி, சந்திரகாந்தன், சேஷாத்ரி, பம்மல் ராஜ், யுவராஜ், பன்ரொட்டி சுரேஷ், ஞானப்பால் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பள்ளமொளச்சூர் ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்: சசிகலா தலைமையில் இன்று நடக்கிறது



சென்னை, செப். 10

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் பள்ளமொளச்சூர் பகுதியில் உள்ள ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துலா லக்னத்தில் மகா சம்ப்ரோக்ஷண கும்பாபிஷேகம் நடக்கிறது. கும்பாபிஷேக விழாவுக்கு வி.கே. சசிகலா தலைமை தாங்குகிறார். ஸ்ரீனிவாச பெருமாள் ஆலயகும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை 7 மணிக்கு மகாகும்பங்கள் யாகசாலை பிரவேசம், கும்ப ஸ்தாபனம் முதல் கால யாகசாலை சதுஸ்தான பூஜைகள், துவார பூஜை, கும்ப பூஜை, மண்டல பூஜை அக்னி பிரதிஷ்டை ஹோமங்கள், வேத ப்ரபந்தங்கள் சாற்று முறை ஆகிய சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு மூலஸ்தான உற்சவ விமான கலசங்களுக்கு 48 கலசதிருமஞ்சனம் நிகழ்ச்சியும், இரண்டாம் கால யாக சாலை சதுஸ்தான பூஜைகள் ஹோமங்கள், பூர்னாஹூதி வேத ப்ரபந்தங்கள் சாற்று முறை, சயனாதிவாசம் போன்ற பூஜைகளும் நடைபெறுகிறது. நாளை காலை 7 மணிக்கு விஷ்வரூப சேவை, கோபூஜை, 3 கால யாக சாலை சதுஸ்தான பூஜைகள், ஹோமங்கள், மகா பூர்ணாஹூதி, யாத்ரா தானம், கிரக ப்ரீத்தி பூஜைகள் நடக்கிறது. காலை 9 மணி முதல் 10.30 மணிக்குள் துலாம் லக்னத்தில் ஸ்ரீனிவாச பெருமாள் விமானங்கள் மூல மூலமூர்த்திகளுக்கு மகாஸம்ப்ரோஷன கும்பாபிஷேகம் திருவாராதனம் வேத ப்ரபதங்கள் சாற்று முறை ஆகியவை நடைபெறுகிறது.

கும்பாபிஷேக விழாவுக்கான ஏற்பாடுகளை ஸ்ரீபெரும்புதூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மொளச்சூர் இரா.பெருமாள் செய்து வருகிறார்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 10 ஆயிரம் பேருக்கு நாளை அன்னதானம் வழங்கப்படுகிறது. கும்பாபிஷேக விழாவுக்கு வரும் வி.கே.சசிகலாவை வரவேற்கும் வகையில் வழியெங்கும் வரவேற்பு பதாகைகள் வைக்கப்பட்டு உள்ளது. பள்ளமொளச்சூர் முழுவதும் வாழைமரங்கள், மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

# காட்டுப் பன்றி தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எடப்பாடி



சென்னை, செப். 11

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: வட தமிழகத்தில் கரும்பு சாகுபடிக்கு கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்கள் முன்னனியில் உள்ள மாவட்டங்களாகும். எனவேதான், இப்பகுதியில் சர்க்கரை ஆலைகள் அதிகம் உள்ளன. ஆனால் வேளாண்மைத் துறை அமைச்சரின் சொந்த மாவட்டமான கடலூரில் இந்த ஆண்டு சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிட்ட நிலையில், மஞ்சள் அழுகல் நோய், வேர் புழு நோய் போன்ற நோய்கள் தாக்கியும், மற்றும் காட்டுப் பன்றிகளின் தொல்லையாலும், சுமார் 8 ஆயிரம் ஏக்கரில் விளைந்த கரும்பு பயிர்கள் முழுமையாக பாதிப்படைந்துள்ளது.

எனவே, அரசின் வேளாண்மைத்துறை அமைச்சர், தமிழகம் முழுவதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி வைத்து, கரும்பு சாகுபடி மேற்கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கணக்கெடுத்து, ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாயை நிவாரணமாக வழங்கவேண்டும். கரும்பு சாகுபடி விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்துகளை உடனடியாக வழங்க வேண்டும். காட்டுப் பன்றி தாக்குதலில் இருந்து பயிரிடப்பட்டுள்ள கரும்புகளைக் காப்பாற்றுவதற்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வெடிகுண்டு கண்டுபிடிக்கும் பிரிவில் பணியாற்றி உயிரிழப்பு: போலீஸ் மரியாதையுடன் மோப்பநாய் உடல் அடக்கம்



சூலூர், செப். 10

கோவை மாவட்ட ஆயுதப்படை பிரிவில் 7 மோப்ப நாய்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நாய்கள் கொலை, கொள்ளை, வெடிகுண்டு கண்டுபிடிப்பு ஆகிய சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. வெடிகுண்டு கண்டுபிடிக்கும் பிரிவில் கடந்த 3 ஆண்டுகளாக லேப்ரடார் வகையை சேர்ந்த ராஜா என்ற மோப்பநாய் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த மோப்ப நாய் கடந்த ஒரு வார காலமாக உடல் சரியில்லாமல் இருந்து வந்தது. சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் உயிரிழந்தது. உயிரிழந்த மோப்ப நாய்க்கு கோவை மாவட்ட ஆயுதப்படை டி.எஸ்.பி. தென்னரசு தலைமையில் இறுதி சடங்கு நடந்தது. அப்போது மோப்பநாய் ராஜாவுக்கு 30 குண்டுகள் முழங்க இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் சூலூர் போலீஸ் நிலையத்தில் உள்ள துப்பறியும் மோப்ப நாய் பிரிவு வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. உயிரிழந்த மோப்ப நாய் ராஜா சென்னையில் நடந்த சுதந்திர தின விழா, நீலகிரி மாவட்டம் முதுமலையில் ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டது.

# தரை தட்டி நிற்கும் இழுவை கப்பல் கூடங்குளத்தில் பரபரப்பு



நெல்லை, செப். 10

சுமார் 300 டன் எடை கொண்ட இந்த எந்திரம் கடந்த 7ந்தேதி தூத்துக்குடிக்கு வந்தது. மிதவையின் ஒரு பக்கம் சாய்ந்த நிலையில் இருப்பதினால் அதனை சரி செய்யும் பணிகளில் இதனை ஏற்றி வந்த ஒப்பந்தக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு 5 மற்றும் 6வது அணு உலைகளுக்கான நீராவி உற்பத்தி செய்யும் எந்திரம் ரஷியாவில் இருந்து கொண்டு வரப்பட்டது. சுமார் 300 டன் எடை கொண்ட இந்த எந்திரம் கடந்த 7ந்தேதி தூத்துக்குடிக்கு வந்தது. நேற்று தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இழுவை கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டது. அப்போது இழுவை கப்பலுக்கும், மிதவைக்கும் இடையிலான கயிறு அறுந்து விட்டதினால் நீராவி உற்பத்தி எந்திரத்தின் மிதவை அங்குள்ள பாறை இடுக்குகளில் சிக்கி உள்ளது. அதனை சரி செய்யும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இதனால் மிதவையின் ஒரு பக்கம் சாய்ந்த நிலையில் இருப்பதினால் அதனை சரி செய்யும் பணிகளில் இதனை ஏற்றி வந்த ஒப்பந்தக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அணுமின் நிலையத்தின் சிறிய துறைமுக பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் பாறை இடுக்குகளில் சிக்கியுள்ள அந்த மிதவையானது கடலின் நீர்மட்டத்தின் உயர்வு மற்றும் காற்றின் வேகத்தை பொறுத்து மீண்டும் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உள்ள அந்த சிறிய துறைமுகத்திற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காஞ்சிபுரம் ரவுடி கொலை: காரில் தப்பிச்சென்ற 2 வாலிபர்கள் விக்கிரவாண்டி டோல்கேட்டில் கைது

விக்கிரவாண்டி, செப். 10

காரை போலீசார் சுற்றி வளைத்து காரில் இருந்த 2 பேரை போலீஸ் நிலையம் அழைத்து சென்று விசாரித்தனர். காஞ்சிபுரம் ரவுடி தலையை துண்டாக வெட்டி கொலை செய்து வீசி விட்டு தப்பி சென்றதும் தெரியவந்தது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி டோல் கேட்டில் உதவி போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ், சப் இன்ஸ்பெக்டர் காத்தமுத்து, போக்குவரத்து சப் இன்ஸ்பெக்டர் துரைராஜ் மற்றும் போலீசார் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது வெள்ளை நிற ஹோண்டா கார் வந்தது. இந்த காரை போலீசார் சுற்றி வளைத்து காரில் இருந்த 2 பேரை போலீஸ் நிலையம் அழைத்து சென்று விசாரித்தனர். இதில் குமரன் (வயது 21), விக்னேஷ் (23) என்பதும், இவர்கள் காஞ்சிபுரம் ரவுடி தலையை துண்டாக வெட்டி கொலை செய்து வீசி விட்டு தப்பி சென்றதும் தெரியவந்தது. இதையடுத்து கார் மற்றும் காரில் இருந்த கத்தி, ஹெல்மெட் போன்றவைகளை பறிமுதல் செய்த போலீசார், இது தொடர்பாக காஞ்சிபுரம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அவர்களிடம் 2 வாலிபர்களையும் விக்கிரவாண்டி போலீசார் ஒப்படைத்தனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 10.09.2023

# இணையத்தில் ட்ரெண்டாகும் ரத்தம் டிரைலர்



நடிகர் சிவா நடிப்பில் வெளியான 'தமிழ்படம்' திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் சி.எஸ்.அமுதன். இவர் மின்னலே, அனேகன் உள்ளிட்ட திரைப்படங்களில் பாடல்களும் எழுதியுள்ளார். இவரது இயக்கத்தில் அடுத்ததாக உருவாகியுள்ள படம் 'ரத்தம்'. இந்த படத்தில் விஜய் ஆண்டனி, மகிமா நம்பியார், ரம்யா நம்பீசன், நந்திதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், இப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. பரபரப்பு காட்சிகளுடன் உருவாகியுள்ள இந்த டிரைலரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் ட்ரெண்டாக்கி வருகின்றனர். 'ரத்தம்' திரைப்படம் வருகிற 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜிகர்தண்டா 2 டீசர் அறிவிப்பை வெளியிட்ட படக்குழு



கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் 2014ம் ஆண்டு மதுரையை களமாக கொண்டு உருவாகிய படம் "ஜிகர்தண்டா". சித்தார்த் கதாநாயகனாக நடித்த இந்த படத்தில் லட்சுமி மேனன் அவருக்கு ஜோடியாக நடித்திருந்தார். இப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் பாபி சிம்ஹா நடித்திருந்தார். இந்த படத்துக்காக 2014ம் ஆண்டின் தேசிய விருதை பாபி சிம்ஹா பெற்றார். 8 வருடங்களுக்கு பிறகு ஜிகர்தண்டாபடத்தின் இரண்டாம் பாகம் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் எஸ்.ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படம் வருகிற தீபாவளியன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

ஜிகர்தண்டா 2 போஸ்டர் இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'ஜிகர்தண்டா 2' திரைப்படத்தின் டீசர் 11ஆம் தேதி நண்பகல் 12.12 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.

# ஜெயம் ரவியின் 'சைரன்' தோற்றம்



ஜெயம் ரவியின் முதல் தோற்றத்தை படக்குழுவினர் வீடியோவாக வெளியிட்டுள்ளனர். 'சைரன்' படத்தின் ஜெயம்ரவியின் முதல் தோற்றம் வெளியாகி வலைதளத்தில் ரசிகர்களின் வரவேற்பை பெற்று வருகிறது. ஆண்டனி பாக்யராஜ் இயக்கத்தில் சுஜாதா விஜய்குமார் தயாரிப்பில் ஜெயம்ரவி நடித்திருக்கும் படம் 'சைரன்'. கதாநாயகியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். யோகிபாபு, சமுத்திரகனி உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர்.

குடும்ப அம்சங்களுடன் ஆக்ஷன் திரில்லராக பிரமாண்ட பொருட் செலவில் எடுக்கப்படும் இந்த படத்தில் ஜெயம்ரவி இரண்டு தோற்றங்களில் நடிக்கிறார். ஜெயம் ரவிக்கு இன்று பிறந்த நாள். இதையொட்டி படத்தில் அவருடைய முதல் தோற்றத்தை படக்குழுவினர் வீடியோவாக வெளியிட்டுள்ளனர். அவரின் 21 வருட திரை வாழ்க்கையில் இதுவரை நடிக்காத தோற்றத்தில் மிரட்டலாக தோன்றியுள்ளார். ஒரு தோற்றம் அமைதி கலந்த கோபமான தோற்றத்திலும் இன்னொரு கதாபாத்திரம் இளமை துள்ளலுடன் ரொமான்ஸ் பார்வையிலும் நடித்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. விரைவில் படத்தின் டீசர், டிரெய்லர் மற்றும் இசை வெளியீடு நடைபெற உள்ளது. 'சைரன்' படத்தின் ஜெயம்ரவியின் முதல் தோற்றம் வெளியாகி வலைதளத்தில் ரசிகர்களின் வரவேற்பை பெற்று வருகிறது.

# வெங்கட் பிரபு தான் இந்த படத்தை இயக்குவதாக இருந்தது மனம் திறந்த முத்தையா முரளிதரன்







இயக்குனர் எம்.எஸ்.ஸ்ரீபதி '800' படத்தை இயக்கியுள்ளார். இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். கடந்த 2010ஆம் ஆண்டு வெளியான 'கனிமொழி' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் எம்.எஸ்.ஸ்ரீபதி. இவர் தற்போது கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை படமான '800' படத்தை இயக்கியுள்ளார். மூவி டிரையின் மோஷன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இந்த படத்தில் 'ஸ்லம்டாக் மில்லியனர்' படப்புகழ் நடிகர் மதுர் மிட்டல், முத்தையா முரளிதரனாக நடித்துள்ளார். மேலும், மகிமா நம்பியார், நரேன், நாசர், வேல ராமமூர்த்தி, ரித்விகா, வடிவுக்கரசி, அருள்தாஸ், ஹரி கிருஷ்ணன், யோக் ஜேபி, சரத் லோஹிதாஷ்வா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது. இதில், கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் பேசியதாவது, "இயக்குனர் வெங்கட்பிரபு, இயக்குனர் ஸ்ரீபதி என நாங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மன்றம் அமைத்தோம். என் கஷ்டத்தின் போது உதவி செய்த என் நாட்டு மக்களுக்கு திரும்ப நல்லது செய்ய வேண்டும் என இதை ஆரம்பித்தோம். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு, ஆயிரம் மாணவர்களைப் படிக்க வைப்பது என பல விஷயங்களை செய்து வருகிறோம். வெங்கட்பிரபுவும் என் மனைவியும் சிறு வயது நண்பர்கள். அவர்கள் சந்தித்து பேசினார்கள். வெங்கட்பிரபு பேசிக் கொண்டிருக்கும் போது, என்னைப் பற்றி பயோபிக் எடுக்கலாம் என்று சொன்னார். இந்தப் படம் மூலம் வரும் பணம் டிரஸ்ட்டுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று என் மேனேஜர் ஆலோசனை சொன்னார்.

என்னைப் பற்றி நன்றாக ஆராய்ந்து தான் இயக்குனர் ஸ்ரீபதி கதை எழுதியுள்ளார். வெங்கட்பிரபுதான் முதலில் இயக்குவதாக இருந்தது. ஆனால், அவருக்கும் தயாரிப்பாளருக்கும் பிரச்சினை என்பதால் விலகிவிட்டார். ஸ்ரீபதியை நான் இயக்க சொன்னேன். பின்பு விஜய்சேதுபதி வந்தார். ஆனால், அதிலும் பிரச்சினை வந்தது. இந்த பிரச்சினைகள், கொரோனா இதை எல்லாம் தாண்டி படத்தை முடித்த இயக்குனர் ஸ்ரீபதிக்கும், படத்திற்கு ஒத்துழைத்த மொத்த குழுவுக்கும் நன்றி. நாங்கள் மலையகத் தமிழர்கள் வம்சாவளியில் வந்தோம். எங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு பல தடைகள் வந்தது. படத்திற்கும் அப்படியான தடைகள் இருந்தது. ஆனால், இலங்கையில் எடுத்த 80 நாட்களும் படத்தைப் பற்றிப் புரிந்து கொண்டு அரசு ஒத்துழைப்புக் கொடுத்தது.

ஸ்கிரிப்டில் அப்படியே ஸ்ரீபதி கொண்டு வந்துள்ளார். இன்னும் நான் படம் பார்க்கவில்லை. 'நீங்கள் காப்பி பண்ண வேண்டாம், எந்தவிதமான அழுத்தமும் இல்லாமல் நடியுங்கள்' என்று ஹீரோ மதுரிடம் சொன்னேன். கிரிக்கெட் படமாக இல்லாமல் '800' நான் சாதனை படைத்ததற்கு பின்னால் இருந்தது என்ன, என்ன பிரச்சினைகளோடு விளையாடினேன், என்னால் நாடு எந்த நிலைக்கு வந்தது என்பது குறித்து இந்தப் படத்தில் பேசியுள்ளோம். படம் உங்களுக்கும் பிடிக்கும்" என்றார்.

# ஆசிய கோப்பை 21 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி



16வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் தற்போது சூப்பர் 4 சுற்று நடைபெறுகிறது. சூப்பர் 4 சுற்றின் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வங்காளதேசத்தை வீழ்த்தி இருந்தது. இந்நிலையில், இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள பிரேமதாசா ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்ற சூப்பர் 4 சுற்றின் 2வது ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இலங்கையும், வங்காளதேசமும் மோதின. டாஸ் வென்ற வங்காளதேசம் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 257 ரன்கள் எடுத்தது. சமர விக்ரமா அதிரடியாக விளையாடி அரை சதம் அடித்தார். அவர் 93 ரன்னில் அவுட்டானார். குசால் மெண்டிஸ் 50 ரன்னில் ஆட்டமிழந்தார். பதும் நிசாங்கா 40 ரன்கள் எடுத்தார். வங்காளதேசம் சார்பில் தஸ்கின் அகமது, ஹசன் மமுத் தலா 3 விக்கெட்டும், ஷோரிபுல் இஸ்லாம் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 258 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேச அணி களமிறங்கியது. அந்த அணியின் தவ்ஹித் ஹிருடோய் பொறுப்புடன் ஆடி 82 ரன்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், வங்காளதேச அணி 236 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 21 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது. இலங்கை அணி சார்பில் தீக்ஷனா, தசுன் சனகா, பதரினா ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

# விராட் கோலிக்கு வெள்ளி பேட்டை பரிசளித்த இலங்கை வீரர்



ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய நாடுகள் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறின. சூப்பர் 4 சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் நாடுகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும். சூப்பர் 4 சுற்றின் 3வது ஆட்டம் கொழும்பில் நடக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன. பாகிஸ்தான் போட்டிக்கு தயாராகும் விதமாக கொழும்புவில் இந்திய அணி வீரர்கள் பில்டிங் மற்றும் பேட்டிங் பயிற்சியில் ஈடுபட்டார்கள். இந்நிலையில், இலங்கை வலைப்பயிற்சி பந்துவீச்சாளர் சந்திரமோகன் கிரிஷாநாத், இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலிக்கு வெள்ளியிலான பேட் ஒன்றை பரிசாக அளித்தார். இதுதொடர்பாக அவர் கூறுகையில், நான் விராட் கோலியின் தீவிர ரசிகன். அவரது ஒவ்வொரு சதத்தின் விவரங்களையும் இந்த வெள்ளி பேட்டில் பொறித்துள்ளேன் என தெரிவித்தார்.

# லபுசேன், வார்னர் அதிரடி சதம்: 2வது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா அசத்தல் வெற்றி



ஜோகனஸ்பர்க் தென் ஆப்பிரிக்கா சென்றுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்று இருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2வது ஒருநாள் போட்டி நடைபெற்றது. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி தொடக்கம் முதல் ரன்களை குவித்தது. இதனால் அந்த அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 392 ரன்கள் குவித்தது. டேவிட் வார்னர் மற்றும் லபுசேன் இருவரும் சதமடித்து அசத்தினர். லபுசேன் 124 ரன்னும், வார்னர் 106 ரன்னும் எடுத்தனர்.

டிராவிஸ் ஹெட், ஹோஸ் இங்லிஸ் ஆகியோர் அரைசதம் அடித்தனர். தென் ஆப்பிரிக்க சார்பில் சம்ஷி 4 விக்கெட்டும், ரபாடா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். இதையடுத்து, 393 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் தென் ஆப்பிரிக்க அணி களமிறங்கியது.

அந்த அணியின் டேவிட் மில்லர் மற்றும் கிளாசன் தலா 49 ரன்னும், கேப்டன் பவுமா 46 ரன்னும், டி காக் 45 ரன்னும் எடுத்தனர். இறுதியில் தென் ஆப்பிரிக்கா அணி 41.5 ஓவரில் 269 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் ஆஸ்திரேலிய அணி 123 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


இந்த வெற்றியின் மூலம் 20 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கிறது.

ஆட்ட நாயகன் விருது லபுசேனுக்கு வழங்கப்பட்டது.

# பயிற்சியின் போது நாய்க்குட்டியுடன் விளையாடிய கோலி வைரலாகும் வீடியோ



ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய நாடுகள் 'சூப்பர் 4' சுற்றுக்கு முன்னேறின. ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய அணிகள் வாய்ப்பை இழந்து வெளியேறின. 'சூப்பர்4' சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 2 இடங்களை பிடிக்கும் நாடுகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். 'சூப்பர்4' சுற்றின் 3வது ஆட்டம் கொழும்பில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. இதில் இந்தியாபாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகிறது. இதற்காக இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.



# அமெரிக்க ஓபன் டென்னிஸ்: சபலென்காவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார் கோகோ காப்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் பெலாரசின் அரினா சபலென்கா, அமெரிக்காவின் கோகா காப்புடன் மோதினார். இதில் முதல் செட்டை சபலென்கா 62 என வென்றார். இதையடுத்து, சுதாரித்துக் கொண்ட கோகோ காப் அடுத்த இரு செட்களை 63, 62 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.